செய்தி வெளியீடு எண் : 2272 நாள் : 15.12.2022

# <u>20ஆவது சென்னை சர்வேதச திரைப்பட விழா</u>
# <u>மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்.</u>

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், இன்று (15.12.2022) சென்னை, இராயப்பேட்டை, பி.வி.ஆர். சத்யம் சினிமா திரையரங்கில், இந்தியத் திரைப்படத் திறனாய்வு கழகம் (Indo Cine Appreciation Foundation) சார்பில் நடைபெற்ற "20ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவினை" (Chennai International Film Festival) குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., இந்தியத் திரைப்படத் திறனாய்வுக் கழகத்தின் தலைவர் திரு.சிவன் கண்ணன், துணைத் தலைவர் திரு.பி,இராமகிருஷ்ணன், பொதுச் செயலாளர் திரு.இ.தங்கராஜ், திரைப்பட நடிகை திருமதி.பூர்ணிமா பாக்கியராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

<u>மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், 20ஆவது சென்னை சர்வேதச திரைப்பட விழாவில் ஆற்றிய உரை:</u>

"20ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவை துவக்கி வைக்கின்ற வாய்ப்பு வழங்கியதற்கு இந்த நேரத்தில் நன்றியை கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். கொரோனா என்கின்ற பேரிடர் காரணத்தினால் கடந்த ஆண்டு மிகச் சுருக்கமாகவும், எளிமையாகவும் இந்த நிகழ்ச்சியை நடத்த வேண்டிய ஒரு சூழ்நிலை உருவானது. அந்த சூழ்நிலையில் எப்படி திரைப்படத் துறையும் பாதிக்கப்பட்டு, தற்பொழுதுதான் திரைப்படங்கள் இயக்குகிற ஒரு சூழ்நிலை இன்று உருவாகியிருக்கிறது. ஏன் உலகளவில் அனைத்து நாடுகளிலும் இந்த சூழ்நிலை எழுந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிட மாட்டோம்.

இந்த ஆண்டு அனைத்து விழாக்களும் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்ற 20ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழா நிகழ்ச்சி இன்று தொடங்கி தொடர்ந்து 8 நாட்களுக்கு நடைபெறவிருக்கிறது. இத்திரைப்பட விழா சிறப்பாக நடந்து முடிய என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளையும், என்னுடைய வாழ்த்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துகளையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியத் திரைப்படத் திறனாய்வுக் கழகம் (Indo Cini Appreciation Foundation) ஒரு பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கமற்ற அமைப்பாகும். சினிமாவை ஊக்குவிப்பதற்காக உலகத்தரம் வாய்ந்த பல்வேறு நாடுகளில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களில் விருதுகளை வென்ற சிறந்த திரைப்படங்கள் இந்த அமைப்பின் மூலம் சென்னையில் திரையிடப்படுகிறது. இந்த அமைப்பில்,

திரைப்பட இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள், விஷுவல் கம்யூனிகேசன் மாணவர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்கள் உட்பட 500க்கும் மேற்பட்ட பதிவுபெற்ற உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு அரசின் ஆதரவுடன் 2003ஆம் ஆண்டு முதல் சென்னை சர்வதேச திரைப்பட விழாவை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. மேலும், 2008ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் சென்னை சர்வதேச திரைப்பட விழா நடைபெற்று வருகிறது.

முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், 6ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழா 17.12.2008 அன்று நடைபெற்ற போது இதற்கென தமிழ்நாடு அரசின் நிதியுதவி ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் தொடர்ந்து, 2012ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை (10 முதல் 15ஆவது) சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) தமிழ்நாடு அரசின் நிதியாக வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும், 2018ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை (16வது முதல் 19வது) சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.75,00,000/- (ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதியுதவியாக தமிழ்நாடு அரசு மூலம் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைபெறும் 20வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.75,00,000/- (ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் செய்தித் துறையின் சார்பாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்றைக்கு இதே துறையில் ஒரு நடிகராக இருந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்வாகி நேற்றைக்கு தமிழ்நாடு அரசின் மாண்புமிகு அமைச்சராக பொறுப்பேற்றிருக்கிற சகோதரர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு இந்தத் துறை செயல்பட்டு வருகிறது.

கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் வழங்க வேண்டிய தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு 6 ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டது. 2015ஆம் ஆண்டிற்கான விருது அரசாணையாக வெளியிடப்பட்டிருக்கிறது. மேலும், 2016, 2017, 2018, 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளுக்கான விருதுகளை தேர்வு செய்வதற்கான குழு அமைக்கப்பட்டு வருகிறது. விரைவில் அதற்கான தேர்வு நடைபெற்று கலைஞர்களுக்கான அந்த விருதுகளும் திரைப்படத் துறையிலும், சின்னத்திரை சார்ந்திருப்பவர்களுக்கும், தமிழ்நாடு அரசின் Film City சார்ந்த மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை சர்வேதச திரைப்பட விழாவில் திரைப்படக் கல்லூரி மாணவர்கள், திரைப்பட ஆர்வலர்கள், பொதுமக்கள் அதிகளவில் பங்கேற்றுள்ளதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடைபெறவேண்டும். தமிழக அரசின் ஆதரவு அனைத்து வகையிலும் தொடர்ந்து நிச்சயமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, இந்த நிகழ்ச்சிக்கு வாழ்த்துக்கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்." என்றார்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in